

## மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில்

# தமிழ் புதல்வன் திட்ட தொடக்க விழா

குழித்துறை, ஆக.12-
மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில்
தமிழ் புதல்வன் திட்ட தொடக்க விழா மற்றும் பயனாளிக
ளுக்கு அட்டை வழங்கும் விழா நடந்தது. விழாவுக்கு கல்லூரி
பொறுப்பு முதல்வர் ஜி.டி.பிஜி தலைமை தாங்கினார். பேரா
சிரியர் ஜாண் பிரிட்டோ வரவேற்று பேசினார். கல்லூரி
தாளாளர் பிரபின் முன்னிலை வகித்தார்.
சிறப்பு விருந்தினராக குழித்துறை நகராட்சித் தலைவர்
பொன் ஆசைத்தம்பி கலந்து கொண்டு மாணவர்களுக்கு
பயனாளிகள் அட்டை வழங்கினார். நிகழ்ச்சியில் கல்லூரி
பேராசிரியர்கள் அலெக்ஸ் ஜேக்கப், ஜெயசிங் ஆகியோர்
வாழ்த்தி பேசினர். முடிவில் முதுகலை தமிழ் பிரிவு தலைவர்
கிங்ஸ்லி தேவஜோஸ் நன்றி கூறினார்.